பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 03 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் 17 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ராமேஸ்வரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பாம்பன் ரயில் பாலத்தை அடுத்த மாதம் 6-ஆம் தேதி பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்துவைக்க உள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

- தமிழகத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு அமித் ஷா-விடம் வலியுறுத்தியதாக அஇஅதிமுக தெரிவித்துள்ளது.

- கருங்கடல் பகுதியில் கடற்படை போர் நிறுத்தத்திற்கு ரஷ்யா மற்றும் உக்ரைன் சம்மதம் தெரிவித்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

- அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா மற்றும் இக்பால் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>>**

இந்தியாவின் சமூக பாதுகாப்பு திட்டங்கள் 48 புள்ளி எட்டு சதவீத மக்களை சென்றடைந்துள்ளதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த பத்தாண்டுகளில் நாட்டில் 17 கோடி வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மட்டும் 4 கோடியே 60 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

2017-18-ஆம் நிதியாண்டில் ஆறு சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம், 2023-24-ஆம் நிதியாண்டில் மூன்று புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்திருப்பதாக அவர் கூறினார்.

மகளிர் வேலைவாய்ப்பு 22 சதவீதத்தில் இருந்து, 40 சதவீதமாக உயர்ந்திருப்பதாகவும், மத்திய அரசின் கொள்கைகள் மூலமாக நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு வளர்ச்சி கண்டிருப்பதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ராமேஸ்வரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பாம்பன் ரயில் பாலத்தை அடுத்த மாதம் 6-ஆம் தேதி பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்துவைக்க உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

ராமேஸ்வரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு ஆர் என் சிங், இது தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

பழைய பாம்பன் ரயில் பாலத்தை அகற்றுவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்றும், ராமேஸ்வரம் – தனுஷ்கோடி இடையேயான ரயில் சேவைப் பணிகள் குறித்து மாநில அரசுடன் கலந்து ஆலோசித்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு ஆர் என் சிங், தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பீகாரில் உள்ள நவ நாலந்தா மஹா விஹாரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மலேசிய நாட்டின் தொழில்நுட்ப உதவியுடன் பௌத்த செயற்கை நுண்ணறிவு அமைப்பை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.

இதுதொடர்பாக, இருதரப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளதாகவும், இதன்மூலம், சிறப்பு செயற்கை நுண்ணறிவு அமைப்பு மற்றும் **Chatbot** செயல்படுத்தப்பட உள்ளதாகவும், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சித்தார்த் சிங் தெரிவித்துள்ளார்.

பௌத்த கலை கலாச்சாரம் மற்றும் அந்நிய நாடுகள் உடனான உறவை ஊக்குவிக்கும் விதமாக இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கரின் சுக்மா மாவட்டத்தில் 6 பெண்கள் உட்பட 9 மாவோயிஸ்டுகள் இன்று சரணடைந்தனர்.

இவர்கள் பல்வேறு குற்றச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும், மத்திய ரிசர்வ் காவல்படை மூத்த அதிகாரிகள் முன்னிலையில், இவர்கள் சரணடைந்தனர் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மகாதேவ் செயலி ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக சத்தீஸ்கர் முன்னாள் முதலமைச்சர் திரு பூபேஷ் பாஹலுக்கு சொந்தமான இடங்களில இன்று மத்திய புலனாய்வு அமைப்பு சோதனை நடத்தி வருகிறது.

ராய்பூர் மற்றும் பிலாய் பகுதியில் உள்ள பூபேஷ் பாஹலின் வீடுகள், ஏழு அரசு அதிகாரிகள் வீடுகள் உட்பட சுமார் 20 இடங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா-விடம் வலியுறுத்தியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்துறை அமைச்சரை சந்தித்தது பேசியபோது, தமிழக பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதித்ததாக கூறினார்.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கையே தொடர வேண்டும் என்று அவரிடம் கேட்டுக்கொண்டதாக தெரிவித்தார்.

தமிழக திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு நிலைமை குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டறிந்ததாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்டம் நாடு முழுவதும் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் சேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக வேலூர் அஞ்சல் கோட்ட முதுநிலை கண்காணிப்பாளர் திரு ராஜகோபாலன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - ராஜகோபாலன் - 39 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

கருங்கடல் பகுதியில் கடற்படை போர் நிறுத்தத்திற்கு ரஷ்யா மற்றும் உக்ரைன் சம்மதம் தெரிவித்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதுதொடர்பாக, வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கருங்கடல் பகுதியில் பாதுகாப்பான முறையில் கப்பல் பயணம் மேற்கொள்ளும் வகையிலும், ராணுவ பயன்பாட்டிற்காக வர்த்தக கப்பல்கள் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையிலும் இந்த போர் நிறுத்தம் அமையும் என்று தெரிவித்துள்ளது.

இந்த புதிய ஒப்பந்தத்தின்படி, ரஷ்ய நாட்டின் வேளாண் மற்றும் உரங்கள் ஏற்றுமதி முன்னேற்றம் காணும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையையடுத்து, இந்த அறிக்கையை அது வெளியிட்டுள்ளது.

மூன்றாண்டுகளாக தொடரும் போரை முடிவுக்கு கொண்டுவர இந்த பேச்சுவார்த்தை ஒரு தொடக்கமாக அமையும் என்று யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

தென்கொரியாவின் தென்கிழக்குப் பகுதியில் நேரிட்ட காட்டுத் தீ காரணமாக 18 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்தனர்.

காட்டுத்தீயினால் **Sancheong** மாகாணம் மற்றும் **Andong** உள்ளிட்ட ஐந்து நகரங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், சுமார் 23 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, 17 ஆயிரம் ஹெக்டேர் வனப்பகுதி சேதமடைந்துள்ளதாகவும், தென்கொரிய வரலாற்றில் மூன்றாவது பெரிய காட்டுத்தீ சம்பவமாக இது பதிவாகியுள்ளதாகவும் அந்நாட்டின் இடைக்கால அதிபர் திரு **Han Duck – Soo** வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காற்று வேகமாக வீசி வருவதன் காரணமாக, காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணி தாமதமாகி வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

நாட்டின் வடமேற்கு பகுதியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும், இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், கர்நாடகா , கேரளா, மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னல் மற்றும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

நாளை முதல் வரும் 29-ஆம் தேதிவரை தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், யானாம் மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் கடலோர பகுதிகளின் ஒரு சில இடங்களில் வெப்பமான மற்றும் ஈரப்பதமான வானிலை நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா மற்றும் இக்பால் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் ஆரியன் ஷா, 6-2, 6-2 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Minjong Park** –ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இக்பால் 6-0, 6-3 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Yash Yadav** –ஐ வென்றார்.

------------------

மும்பையில் நடைபெற்றுவரும் இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங், ஜோஸ்னா சின்னப்பா, அகன்ஷா சலுன்கே, வீர் சோத்ரானி, அபய் சிங் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி குவாஹாத்தியில் இரவு 7-30 மணிக்கு தொடங்குகிறது.

-----------------

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தகுதிச் சுற்றுப் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது.

<<<<<<END>>>>>>